# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 51வது கூட்டறிக்கை 2022.05.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 51வது அமர்வு 2022.05.12 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.எப்.ஆக்கிலா | தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 51வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் சுகயீனம் காரணமாக சபை அமர்வுக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

சிறீலங்கா சுததந்திரக் கட்சி சார்பாக இருந்த வெற்றிடத்திற்கு ஜனாப். அப்துல் ஹமீட் அன்வர் அவர்கள் கௌரவ உறுப்பினராக புதிதாக சத்தியப் பிரமானம் செய்து எமது சபைக்கு சமூகமளித்துள்ள அவரை உங்கள் சார்பில் வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே இந்த நாட்டில் ஒரு போதும் இல்லாதவாறு அமைதியாக தங்களின் ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்த எமது நாட்டின் பிரஜைகளுக்கு எதிராக கடந்த 09 ஆம் திகதி திட்டமிட்டு நடாத்தப்பட்ட தாக்குதலை இந்த சபை வன்மையாகக் கண்டிக்கின்றது. இன்று நாம் ஒரு பிரதம மந்திரியோ அல்லது அரசாங்கமோ இல்லாத நிலையில் இந்த சபை அமர்வை நாடாத்திக் கொண்டிருக்கின்றோம். நமது பகுதியில் நாம் வளர்த்திருக்கும் அரசியல் கலாசரத்தினால் நாட்டில் என்ன நடந்தாலும் நமது பகுதியில் ஜனநாயக ரீதியில் கௌரவமாக நமது அரசியல் நடவடிக்கைகளை கொண்டிருக்கின்றோம்.

இந்த நாட்டின் நிகழ்வுகள் நாம் உருவாக்கும் அரசியல் கலாசாரத்தின் பெறுபேறுகள் என்பதை நாம் தெளிவாகக் கண்டுள்ளோம். எங்கெல்லாம் சகல நடவடிக்கைகளும் அரசியல் ரீதியாகக் காணப்பட்டதோ அங்கு எல்லாம் அநாச்சாரங்கள் நடந்து கௌரவ தவிசாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அமைச்சர்களின் வீடுகள் கூட தரைமட்டமாக்கப்பட்ட ஒரு சூழலில், நமது பகுதியில் யாரும் எந்த கட்சிக்கு ஆதரவாக இருந்தாலும் அவர்கள் நமது பிரதிநிதிகள், நமக்காக அரசியலில் ஈடுபடுபவர்கள் என்ற ரீதியில் அந்த அசம்பாவிதங்கள் தேசிய ரீதியில் நடந்தவாறு நமது பகுதியில் நடைபெறாதது நமது அரசியல் கலாசாரத்தின் பெறுபேறு. இந்த சபையைப் பொறுத்தமட்டில் நாமும் மேடைகளில் என்ன பேசினாலும் கட்சி ரீதியாக என்ன கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் இந்த சபை நடவடிக்கைகளில் நாம் மக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் பயணித்ததின் பெறுபேறுகள் இன்று நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளில் இருந்து உங்களுக்கு அது தெளிவாக விளங்கியிருக்கும்.

இனிவரும் காலத்தில் இன்று காலிமுகத்திடலில் இளைஞர்கள் கூறுவது போல் நமது நாட்டின் அரசியல் கலாசாரம் மாறி கட்சி அரசியலுக்கும் மக்களுக்காக செய்யும் சேவைகளுக்கும் வித்தியாசம் இருக்கும் வேண்டும் என்பதை மிகத் தெளிவாக கூறுகின்றார்கள். இனிவரும் தேர்தலில் கூட அந்த அபிலாசைகள் பிரதிபலிக்குமென நினைக்கின்றேன். சிலவேளைகளில் ஒரு புது அரசாங்கம் உருவாகி உள்ளூராட்சி ஒரு புது அமைச்சர் நியமிக்கப்பட்டதும், உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அப்படியான ஒரு நிலையில் நாம் இந்த சபையிலிருந்து வெளியேறும் போது சென்ற சபையிலிருந்து நாங்கள் எப்படி இந்த சபையை ஒரு இஸ்த்தீரமான ஒரு நிர்வாகமாக வைத்துவிட்டு போனோமோ, அதேபோல் நாம் பதவி விலகும் போதும் இந்த சபை நம்மால் நமது நடவடிக்கையினால் தொடர முடியாத ஒரு நிலை இருக்கமாட்டாது. ஏனென்றால் உங்களின் நடவடிக்கையோடு நீங்கள் எனக்கு தந்த உதவியோடு, அதிகாரத்தோடு நாம் இன்று கூட விலகினால், இந்த சபையை கலைக்கப்பட்டாலும் வருகின்ற 5 மாதங்களுக்காவது இந்த சபையை நிலையாக நடத்தக்கூடிய நிதியை நாம் வைப்பிலிட்டு விட்டுத்தான் செல்வோம் என்ற மகிழ்ச்சியான பெருமையான செய்தியை நான் உங்களுக்கு எத்தி வைக்க விரும்புகின்றேன்.

நீங்கள் என்னோடு மன வருத்தப் பட்டாலும் அதை விட வெளியேறும் போது நாம் இந்த சபையை எந்த நிலையில் வைத்து விட்டுப் போவோம் என்பது தான் இன்றைய சூழலில் முக்கியமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். நிலையான வைப்பில் ஏறத்தாழ 29 மில்லியன் சபை இட்டிருக்கின்றது. அதில் ஏறத்தாழ 19 மில்லியன் பொதுமக்களின் காசு அதைவிட நமது வங்கிக் கணக்கில் இருக்கும் தொகை இன்ஷா அல்லாஹ் இறைவனின் உதவியோடு வருகின்ற 4 அல்லது 5 மாதங்களுக்கு இந்த சபையை செயலாளர் தலைமையில் நடத்துவதற்கு போதிய நிதி வசதிகளை செய்து விட்டு

செல் செல்பவர்களாக நாம் இருப்போம். இந்த சபையை தொடர்ந்து நடத்துவது ஒரு பாரிய சவால். நானும் செயலாளரும் ஒவ்வொரு நாளும் பேசிக்கொண்டிருக்கும் போது எந்த அளவுக்கு ஏறத்தாள எரிபொருளுக்கு மட்டுமே ஐந்து மில்லியன் ரூபாய் மேலதிகமாக இந்த வருடம் பூர்த்தியாவதற்கு முன். இவை ஒன்றும் அரசாங்கம் எமக்கு திருப்பித் தரும் பணம் அல்ல. நிரந்தர ஊழியர்களின் சம்பளத்தை தவிர மற்ற செலவுகள் எல்லாம் ஏறத்தாள நமக்கு சபையை நடாத்துவதற்கு நாளாந்த சேவைகளை செய்வதற்கு சராசரி 5.2 மில்லியன் ரூபாய் தேவைப்படும். ஆனால் அந்த நிதி நமது இருப்பில் இருப்பதனால் செயலாளர் பீதியடைய தேவையில்லை. அவர் நாளாந்த செயல்களை செய்வதற்கு அந்த பணம் உதவியாக இருக்கும்.

இன்றைய சூழலில் அரசினால் முன்னெடுக்கப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் இருக்கின்றது. அவை மீண்டும் கட்டியெழுப்பப்படுமா? அல்லது முடியாமல் நிறுத்தப்படுமா என்பதை நமக்கே கூற முடியாத சூழல். அவ்வாறிருக்க எமது புதிய அங்கத்தவரை மீண்டும் வரவேற்றவனாக, எமது சபையின் அடுத்த விடயமாக சென்ற மாத செலவினங்கள் அங்கீகரித்தல்.

### தீர்மானம் - 04/51/01

சென்ற மாதம் 2022.04.01 தொடக்கம் 2022.04.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/51/02

LI 3269 Compactor இயந்திரத்திற்கு பின் டயர்களின் பிறேக் பகுதி திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

சபையில் நான் அறிவிப்பதற்கு எந்த விடயமும் இல்லாத படியினால், சம்பிரதாய ரீதியாக நமது சபையில் புதிதாக நம்மோடு கௌரவ உறுப்பினராக இன்று சமூகம் அளித்திருக்கும் கௌரவ உறுப்பினர் அப்துல் ஹமீட் அன்வர் அவர்கள் உரையாற்றுவதற்கு சபை அனுமதி வழங்குகின்றது.

### கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம், அஸ்ஸலாமு அலைக்கும், வணக்கம். கௌரவ தவிசாளர் அவர்களே, உதவித் தவிசாளர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மற்றும் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு கௌரவ உறுப்பினர்களே, இந்த சபையின் செயலாளர் அவர்களே உங்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும், வணக்கம். கௌரவ தவிசாளர் அவர்களே நாட்டின் இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியில் சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமைக்காக எமது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கௌரவ தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும், கட்சியின் செயலாளர் கௌரவ ஜெயஸிரீ ஜெயசேகர அவர்களுக்கும் அம்பாரை மாவட்ட தலைமை முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி கௌரவ சிறியானி விஜய விக்ரமதுங்க மற்றும் எனது நண்பன் முன்னாள் உதவித் தவிசாளர் கௌரவ ஜெயச்சந்திரன் உட்பட இந்த சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இனிய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் போட்டியிட்டோம். அந்தத் தேர்தலில் நான் போட்டியிட்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 4 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றது. அதில் இரண்டு ஆசனங்கள் வட்டாரத்தினை வென்ற ஆசனங்களாகவும், இரண்டு ஆசனங்கள் தேசியப் பட்டியல் ஆசனங்களாகவும் அமையப்பெற்றுள்ளது. தேர்தலில் நான் கணிசமான வாக்குகள் பெற்றிருந்தும் உறுப்பினராவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இறைவனின் ஆசியினாலும், நல்ல மனிதர்களின் ஒத்துழைப்பாலும் இந்த சபைக்கு தெரிவாகி உள்ளேன். எனக்கு கிடைத்த இந்த அமானித பதவியை கொண்டு நான் பிரதிநித்துவப்படுத்தும், வட்டார மக்களுக்கும் அதை அண்டிய மக்களுக்கும் வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு இன்னும் இதர தேவைகளில் என்னால் முடிந்த அளவு செய்ய சித்தமாக உள்ளேன். அத்துடன் இந்த சபையில் என்னால் முன்னெடுக்கப்படுகின்ற சகல செயற்பாடுகளுக்கும் கௌரவ தவிசாளர் உட்பட சகல கௌரவ உறுப்பினர்களும், இந்த சபை நிர்வாகமும் போதிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என இந்த சபையில் கேட்டுக் கொள்வதோடு, கடந்த காலங்களில் எனக்கு ஆதரவு அளித்து செயற்பட்ட ஆதரவாளர்கள், வாக்களித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, எனது கட்சிக்கும், எனது மாவட்ட தலைமைத்துவத்திற்கும் எமது அரசியல் நண்பர்களுக்கும் எனது குடும்பத்தினருக்கும், மார்க்க வழிகாட்டிகளுக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நன்றி, வேறு யாரவது பேச விரும்பினால்

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் என்ற வகையிலும், சம்மாந்துறை தொகுதியின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் என்ற வகையிலும், நாடு பூராகவும் கட்சியின் யாப்புபையும் கட்சியின் சட்ட திட்டங்களையும் மீறி நடந்த 156 பேர் இடைநிறுத்தி அவர்களுக்கான புதிய நியமனங்கள் அடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நியமனத்தின் பிரகாரம் எமது சம்மாந்துறை சேர்ந்த கௌரவ முன்னாள் உறுப்பினர் வை.எம்.முஸம்மில் அவர்களின் இடத்திற்கு கௌரவ தற்போதைய கௌரவ உறுப்பினர் அன்வர் அவர்கள் நியமனம் செய்யப் பட்டிருக்கிறார்கள்.இதுகுறித்து நாங்கள் சந்தோசப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், எந்த காரணத்திற்காகவோ தெரியவில்லை வீரமுனை வட்டாரத்தைப் பொருத்தவரை கௌரவ தவிசாளர் அவர்களின் ஆலோசனைப்படி இலங்கையில் மூன்று வட்டாரம்தான் மூன்று வட்டாரங்களை ஒன்றிணைத்த ஒரு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட வட்டாரம் மூன்றுதான் காணப்படுகின்றது என நினைக்கின்றேன். அதில் ஒன்றுதான் சம்மாந்துறை வீரமுனை வட்டாரம். வீரமுனை மக்களும் என்ன கொடுப்பனவு செய்தார்கள் என்று தெரியாது அந்த வட்டாரத்தின் வேட்பாளர்களாக களம் இறங்கிய அனைத்து தலைமை வேட்பாளர்களும் அந்த வட்டாரத்தில் நியமனம் கிடைத்துள்ளது. இன்றுடன் இது ஒரு மகிழ்ச்சியான விடயம். ஏதோ ஒரு நாளாவது இந்த சபைக்கு அவரை உறுப்பினராக கொண்டு சேர்த்தமைக்கு இறைவனுக்கு முதற்கண் நன்றியை தெரிவித்தவனாக.

எனது கட்சியின் தீவிர நடவடிக்கையினால் ஏனையோர்கள் நிறுத்தப்பட்டு அந்த இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டதும் நான் மிகவும் மனப்பூர்வமாக என்னால் முடிந்த உதவிகளைச் செய்து, கௌரவ முன்னாள் உப தவிசாளரும் அவரால் முடியுமான உதவிகளை செய்து, கட்சியில் அவர் அம்பாரை மாவட்ட அமைப்பாளராக இருப்பதனால் இந்த சம்மாந்துறையின் நடவடிக்கைகளுக்கு கட்சியின் சார்பாக கௌரவ உறுப்பினர் அன்வர் அவர்கள் தான் கட்சியின் சார்பாக நியமனம் பெற்றுள்ளார். சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் நான், ஆனால் சம்மாந்துறையின் வேலைகளை சம்மாந்துறை சார்பாக அனைத்து முடிவுகளுக்குமான அதிகாரம் கௌரவர் உறுப்பினர் அன்வர் அவர்களுக்குத்தான் உள்ளது. எனவே இனிமேல் இந்த வாய்ப்பை பயன்படுத்தி சம்மாந்துறையின் எதிர்கால முன்னேற்றம் சம்பந்தமாக அவர் ஈடுபடுவார்.

அதுமட்டுமல்ல எமது சபையை பொருத்தவரையில் வெளியிலிருந்து வருபவர்கள் எவரும் எதிர்க்கட்சி ஆளும் கட்சி என்று தான் அடுத்த சபைகளை பார்க்கின்றார்கள். தொடர்ந்து இனிமேல் வருகின்ற சபைகளில் இந்த சபையை பொருத்தவரையில் எதிர்க்கட்சி என்று ஒன்று இல்லை. ஏகமனதான கட்சி தான் இருக்கின்றது. நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சியில் இருந்து வந்தாலும் இந்த சபைக்குள் நுழையும் போது எங்களுக்கு கட்சி பேதம் என்று ஒன்று இல்லை. எங்களுக்கு இது நீடிக்கப்பட்ட சபை. எங்களது 48வது சபையுடன் நின்றிருக்க வேண்டும். இது எங்களுக்கு இறைவனால் மேலதிகமாக கிடைத்திருக்கின்றது. சிறுசிறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இறுதியில் நாங்கள் தவிசாளரிடமே சங்கமிக்கின்றோம். வேறு எந்த சபைக்கும் இவ்வாறான ஒரு பண்பு இருக்காது.

எனக்கு இந்த சபை ஐம்பத்தி ஓராவது சபையாக இருந்தாலும், முந்திய சபையில் ஐம்பது என்று கிட்டத்தட்ட நூறு அமர்வுகளில் இருந்திருக்கின்றேன். அப்படிப்பட்ட இந்த ஒரு சபையில் நாங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளோமே தவிர எதிர்த்துக் களம் இறங்கி நாங்கள் சென்றதில்லை. அவ்வாறு செய்திருந்தால் நாங்கள் சென்றாலும் இந்த சபையில் 16 மில்லியன் இருக்க வேண்டும் என்ற நிலை இருக்காது சின்னாபின்னமாகி சிதறடிக்கப்பட்டிருக்கும். இந்த சபையை பொருத்தவரையில் ஒரு நாளோ அல்லது அடுத்த மாதமோ கலையலாம். அதில் எந்த பிரச்சினையும் இல்லை நாங்கள் போனசில் தான் இருக்கின்றோம். ஆனால் நாங்கள் இருக்கின்ற ஒவ்வொரு நாளும் மிகவும் சிறப்பாக கொண்டு செல்ல வேண்டும். நான் நினைக்கின்றேன் நாடு இன்று இருக்கின்ற சூழ்நிலையில் எமது சபையை போன்று தான் எதிர்காலத்தில் எல்லா கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு ஆட்சி இந்த நாட்டில் வரும். இப்போது இந்த சபையை பற்றி விளங்கி இருக்கும்.

நாங்கள் பிரிந்து இருந்திருந்தால் நமது சம்மாந்துறை சின்னாபின்னமாகி இருக்கும். அந்த ஒரு எண்ணம் இல்லாமல் நாங்கள் ஒற்றுமையாக இருக்க போய் தான் இந்த நாட்டில் எந்த பிரச்சினை வந்தாலும் சம்மாந்துறை என்ற எமது சபை மீதம் பிடித்து எப்படி தொழிலாளர்களுக்கு தொழிலை வழங்கி எவ்வாறு இந்த ஊரை சுத்தப்படுத்த வேண்டும் என்று சொல்லி. கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் இந்த அரசாங்கத்தில் உள்ள காலத்தில் நிறைய பாதைகளைக் கொண்டுவந்து செய்திருக்கின்றார். இதற்கு கௌரவ தவிசாளர் அவர்களும் அனுமதி வழங்கியுள்ளார்கள். எந்தவொரு உறுப்பினர்களும் எதிர்ப்புக்களை தெரிவிக்கவும் இல்லை. இந்த சபையை பொறுத்தவரையிலும், என்னைப் பொறுத்தவரையிலும் கௌரவமாக அவர் செய்த வேலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் உரிய காலத்திற்குள் உரிய முறைப்படி இயங்கி உள்ளதை வரவேற்கவேண்டும். கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் பின்தங்கிய பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு வந்தாலும் எந்த ஒரு பிரிவினையும் இல்லாமல் கட்சி பேதம் இன்றி எந்த மாற்றுக்கருத்தும் இருந்தாலும் அவர் பெற வேண்டியது சரியாக பெற்று அந்த இடத்திற்கு அவர் சேவையாற்றி இருக்கிறார்.

அதேபோல் எங்களது அனைத்து உறுப்பினர்களும், கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள், எனது வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்டு வந்த கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் எனது வட்டாரத்திற்குள் எது செய்தாலும் நானும், கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களும் நாங்கள் எந்த ஒரு எதிர்ப்பும் இன்றி அவர்களுக்கு ஆதரவாகவே இருந்து இருக்கின்றோம். கட்சி போதமோ, ஆட்பேதமோ வர்க்க பேதமோ ஏற்படுத்தி அங்கு நடைபெறுகின்ற அபிவிருத்திகளுக்கு தடைகள் ஏற்படுத்தியதில்லை. நாங்கள் கல்வி, பொருளாதாரம், விவசாயம், கௌரவ தவிசாளர் அவர்கள் விவசாயப் பகுதியின் தலைவராக இருக்கின்ற பாடியினாலும், நானும் சில பகுதிகளுக்கு தலைவராக இருக்கின்ற படியினால் எங்களுக்கு உள்ளார்ந்த உட்கட்டமைப்பு களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை நேரடியாக அவர்களிடம் கதைத்து ஒற்றுமையின் பிரகாரம் நடந்து இருக்கின்றோம்.

எனவே, இந்த சந்தர்ப்பத்தில் இந்த நியமனத்தை வழங்கிய எமது கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி அவர்களுக்கும், எங்களது கட்சியின் செயலாளர் அவர்களுக்கும், மாவட்ட அமைப்பாளர் அவர்களுக்கும் மாவட்ட பிரதிநிதியாக இருக்கின்ற கௌரவ முன்னாள் உப தவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும் நாங்கள் நன்றியை தெரிவித்து கொள்வதுடன், கௌரவ முன்னாள் உறுப்பினர் வை.எம். முஸம்மில் அவர்கள் ராஜினாமா

செய்திருக்கிறார். அவர் இராஜினாமா செய்தததும் உண்மை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டதும் உண்மை. இதில் இரண்டுமே உண்மை. கட்சி அவருக்கு மட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை 156 உறுப்பினர்களை நிறுத்தி அவர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை நியமனம் செய்துள்ளது. எனவே இந்த சபை இந்த விடயங்களை உள்வாங்க வேண்டும் என்பதே இந்த கட்சியின் சார்பாக இந்த தொகுதியின் அமைப்பாளர் என்ற வகையில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். இருக்கின்ற காலத்தில் நாடு உள்ள சூழலில் எந்த தீர்மானம் எடுத்தாலும் நாம் ஒற்றுமையாக செயற்பட்டு இந்த சபையை கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டு விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எம்முடைய பிரதேச சபைக்கு கௌரவ உறுப்பினராக வந்திருக்கின்ற ஏ.எச். அன்வர் (ரமீஸ்) அவர்கள் என்னுடைய உறவுக்காரர் அவருக்கு இருப்பிடம் பல இடங்கள் இருந்தாலும் அவர் எனது வட்டாரத்துக்கு உரியவர். எனக்கும் வட்டார பளுக்கள், சுமைகள் குறையும் என நினைக்கின்றேன். என்னுடைய வட்டாரம் சார்பாக அவரை இந்தப் பிரதேச சபைக்கு மனம் உவர்ந்து வரவேற்கின்றேன். அதேபோல் எமது கௌரவ உப தவிசாளர் அவர்கள் பேசியது போன்று இந்த சபையில் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், எமது ஊருக்கு என்று ஒரு தனி கௌரவம் உள்ளது. அந்த கௌரவத்தை பாதுகாக்க எங்களுக்குள் எந்த முரண்பாடுகளும் இல்லாமல் எல்லா விடயங்களிலும் நாங்கள் ஏகமனதாக தீர்மானங்கள் எடுத்துள்ளோம். முரண்பாடுகள் வந்தாலும் அதை சமாளித்து ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது எமது ஊரின் பண்பு.

இப் பண்பை குழப்புவதற்கு எமது ஊரில் ஒரு கூட்டம் ஆரம்பிக்கின்றார்கள். அந்த குழப்பங்களை இன்ஷா அல்லாஹ் மக்களுக்கு நேரடி ஒளிபரப்பின் மூலம் தெளிவுபடுத்துவேன். ஏனென்று சொன்னால் என்னை தாக்குவதற்கான திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பேஸ்புக்கில் போட்டு மக்களை குழப்புகிறார்கள். நான் இந்த மக்களைப் பார்த்து கேட்க விரும்புகின்றேன், நான் இந்த ஊருக்கு செய்த அநீதி என்ன? இந்த சமூகத்துக்கு செய்த அநீதி என்ன? இந்த நாட்டுக்கு செய்த அநீதி என்ன? இது சம்பந்தமாக நான் கூடிய விரைவில் மக்கள் மத்தியில் பேசுவேன் நன்றி.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே இன்றைய 51 ஆவது அமர்வில் புதிதாக எங்களோடு சங்கமித்து கொண்டிருக்கின்ற, குறிப்பாக எமது வட்டாரத்தில் எங்களோடு போட்டியிட்டு தேர்தலிலே முரண்பாடுகள் இருந்தாலும், தேர்தலுக்கு பின்பாக சந்தோசமாக உலாவிக் கொண்டு ஒன்றுபட்டு செயற்படுகின்ற, இன்று எமது அமர்வுக்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்களை பாராட்டி வரவேற்று, இந்த சபையிலேயே மிகவும் ஒற்றுமையாக கடந்து ஐம்பது அமர்வுகளும் எந்த ஒரு எதிரணியும் இல்லாமல் அல்லது வென்றவர்கள் தோற்றவர்கள் என்றில்லாமல் சமனாக பார்க்கப்பட்டு எல்லா விடயங்களிலும் சம அந்தஸ்து கொடுத்த எங்களது கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் இந்த இடத்தில் நன்றி கூறியவனாக, கடந்த காலங்களைப் போன்று இன்ஷா அல்லாஹ் இந்த அமர்வு நீடிக்குமாக இருந்தால் இந்த ஒற்றுமை எமது ஊரிலே இந்த சபையிலே பிரகாசிக்க வேண்டும் என்று வேண்டி வந்தவரை மீண்டும் ஒருமுறை வரவேற்று அவருடைய சேவை இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் அமைய வேண்டும் என்று பிராத்தித்து விடைபெறுகின்றேன் அஸ்ஸலாமு அலைக்கும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எமது புதிய உறுப்பினர் அப்துல் ஹமீட் அன்வர் அவர்களை வரவேற்று வாழ்த்து கூறி அவர் சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன் அஸ்ஸலாமு அலைக்கும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் உண்மையிலேயே அவர் எடுத்த முயற்சியை கைவிடாது எங்களது புதிய ஒரு கௌரவ உறுப்பினராக ஏ.எச். அன்வர் அவர்கள் இந்த சபையிலேயே பிரசன்னமாகி இந்த கௌரவ உறுப்பினர் என்ற பதவியை பாரம் எடுத்ததற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொண்டு, இதுவே இறுதி அமர்வாக இருக்குமோ என்று எங்களது தவிசாளர் சொன்னது போன்று இறுதி அமர்வாக இருந்தாலும் எனக்கு இன்று பேசுவதற்கு நீண்ட நேரம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் நடக்கும் பிரச்சினை வேறு எங்களின் ஊரில் நடக்கும் பிரச்சினை வேறு. உண்மையில் எங்களது கௌரவ உறுப்பினர் சொன்னது போன்று எதிரிகள் வாழும் இடம்தான் இந்த இடமாக இருந்தாலும், நாங்கள் சம்மாந்துறை என்ற இந்த ஊரை பாதுகாக்க வேண்டும்  என்று என்னினால்இந்த குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது எங்களது கடமையாக இருக்கும். கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் இருக்கும் இடத்தில் நாமும் இருந்தால் இது தான் நடக்கும் என்று நாம் அனைவரும் நினைக்க வேண்டும். ஆகவே இதற்கான அறிக்கையை அவர் விடும்போது நாமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கௌரவ உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்தோடு நான் இந்த சபைக்கு வந்து  51அமர்வுகள் ஆகிவிட்டது சபையிலேயே பிரச்சினைகள் என்று வரும்போது கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்தாசை செய்து இதை ஒரு சமாதானமான முறையில் தான் முடிக்கின்றோம். கௌரவ உறுப்பினருக்கு ஒரு பிரச்சினை எழும்போது அதையும் ஒரு சமாதானமாக முடித்துவிட்டு அதை ஓரம் தள்ளி விட்டு மற்றவர்கள் எள்ளி நகையாடுவது எனக்கு மிகவும் மன வேதனையை தருகின்றது. அதில் எமது சபையில் இருக்கும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட சபையில் உள்ள முகாமைத்துவ உத்தியோகத்தர்களும் உள்வாக்கியுள்ளார்கள். நான் சென்ற வருடம் முதலாம் மாதம் 26ஆம் திகதி எனது குடியிருக்கும் காணியின் எல்லைக்குட்பட்ட வளவில் ஒரு வாயில் படலம் ஒன்றை அமைக்கும் போதும் இந்தப் படலத்தை அமைப்பதற்கான எமது பகுதியில் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர் அவர்களின் உதவியோடும், இந்த சபையில் உள்ள தொழிநுட்ப உத்தியோகத்தர் ஜனாப் றஸாக் அவர்களையும் அழைத்து தான் அந்த வாயில் படலம் அமைத்துள்ளேன். ஆனால் ஏன் என்று தெரியாது திடீரென்று ஏற்பட்டுள்ள பிரச்சினையின் காரணமாக மறுநாள் எனக்கு இந்த சபையில் இருந்து தடுப்பிற்கு ஆட்கள் அனுப்பப்பட்ட போது நான் இந்த சபையை மதித்து உடனடியாக இந்த வேலையை நிறுத்தினேன். அத்தோடு அந்த எல்லை அமைக்கப்பட்ட இடம் எனது கணவரின் பெயரில் இருந்தாலும் வந்த கடிதங்கள் அனைத்திலும் எனது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் பொறுமையாக இருந்து எல்லா இடங்களுக்கும் பதில் கடிதம் அனுப்பினேன். மீண்டும் எனது கணவர் கொண்டு முதலாம் மாதம் 25ஆம் திகதி வாயில் படலம் அமைக்க வேண்டுமென்ற கடிதம் கொடுத்திருந்தார். ஆனால் அதைப் பற்றிய எந்த பதிலும் எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் நான் அனுப்பிய கடிதத்திற்கு பதிலாகவும் எனது கணவரின் கடிதத்திற்கு பதிலாகவும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இருந்து முதலாம் மாதம் 26 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இது இந்த சபைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கும் எனக்கும் எந்த முடிவும் தரவில்லை. கௌரவ உறுப்பினர் என்ற எனக்கு ஒரு நீதி செய்ய வேண்டும் என்று நான் கேட்கவில்லை. எனக்கு ஒரு வருடம் தாண்டியும் முடிவு தரவில்லை என்றால் ஒரு பொதுமகனுக்கு நீங்கள் எவ்வாறு கஷ்டப்படுவீர்கள். எப்போது இதற்கு முடிவு கொடுக்கப் போகிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல் இந்த மாதம் 5ஆம் திகதி எனது வளவின் அருகாமையில் கழிவு நீரினை விடுகிறார்கள் என்று கூறி எனது கணவரின் பெயருக்கு உட்பட்ட கடிதத்தை எடுத்துக்கொண்டு இந்த சபைக்கு வந்தேன். கௌரவ தவிசாளர், செயலாளர் அவர்களிடம் மிகவும் கண்ணியமாக கேட்டுக்கொண்டேன். கண்ணியமான முறையில் புகைப்படத்தை காட்டிச் சொன்னேன். ஏன் நீரை விடுகிறீர்கள் என்று கேட்க போனாலே எனக்கு அடிக்க வருகின்றார்கள் என்று. ஆனால் அந்த இடத்திற்கு யாரும் சமூகம் தரவில்லை. அந்தப் பெண்மணி அவரை நான் தாக்க சென்றதாகக் கூறி பொலிஸில் முறைப்பாடு செய்து, இந்த இடப் பிரச்சினையை தீர்ப்பது உங்களது பிரதேசசபை. இந்த பிரதேச சபை ஒரு வருட காலத்துக்கும் உங்களுக்கு தீர்வு தரவில்லை என்றால் நாங்கள் என்ன

செய்வது என்று கூறி மீண்டும் அது இணக்க சபைக்கு போயுள்ளது. ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் மிகவும் மனவேதனை. நீங்கள் இந்த பிரதேச செயலகத்தால் வந்த கடிதத்தை வைத்தாவது எனக்கு முடிவு தந்திருக்கலாம். நான் சில விஷயங்களை இங்கு எத்தி வைத்தால் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உரிய அதிகாரிகளிடம் சொல்வார்கள் இவர்தான் கஷ்டப்படுத்துகிறார் என்று. உண்மையிலேயே எனது வட்டாரத்தில் நீங்கள் யாருக்கு ஒழுங்கான முறையில் அனுமதி வழங்கி உள்ளீர்கள். ஒழுங்கான முறையில் கட்டடம் கட்டியுள்ளார்கள்.

நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான இடத்திற்கு பொறியியலாளரின் அனுமதி கூட எடுக்காமல் அனுமதி வழங்கி உள்ளீர்கள். அவ்வாறான அனுமதியை கொடுத்து கட்டடங்கள் கட்டப்பட்டு இறுதியில் யார் என்று பார்த்தால் அது நான் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தின் கோவையை ஒருநாள் சென்று கேட்டபோது LGA அவர்கள் கூறினார்கள் சப்ஜெக்ட் செய்பவர் திறப்பை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார் என்று. அது எவ்வாறு காரியாலயத்தில் உள்ள திறப்பை வீட்டுக்கு கொண்டு செல்வது. ஏன் ஒரு உறுப்பினருக்கு அந்த கேவையை பார்க்க முடியாதா? இது தொடர்ந்தும் இவ்வாறு நடந்தால் இப் பிரதேச சபையில் இருக்கும் ஒரு ஊழியருக்கு ஒரு சாரதிக்கு இருக்கும் மரியாதை கூட கௌரவ உறுப்பினருக்கு இல்லை இந்த சபையில். உங்களிடம் நான் எனக்கு நீதி செய்யுமாறு கூறவில்லை. வந்த கடிதத்தின் ஒழுங்கின் படி நீதியைச் செய்யுங்கள். நான் உதவிகள் கேட்டு வந்த நேரத்தில் செயலாளர் சொன்னார், இது ஒரு போமிட்டுக்குரிய கடிதம் நீங்கள் பிரதேச செயலரிடம் செல்லுங்கள் என்றார், நான் உங்களை கஷ்டப்படுத்தாமல் அந்த இடத்துக்கு சென்றேன் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் ஒழுங்கான முறையில் வேலை செய்யவில்லை என்றால் அவர்களுக்கு கடிதத்தை வழங்குங்கள். முகம் பார்த்து பக்கச்சார்பாக நடக்க வேண்டாம் இது எனக்கு மட்டுமல்ல எல்லா உறுப்பினர்களுக்கும் சாரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

இந்த அமர்வுக்கு பின் இதனை விசாரிப்போம்

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் கௌரவ தவிசாளர் அவர்களே இன்று எமது சபையின் 04அமர்வின் 51வது அமர்வுக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் கௌரவ ஏ.எச்.அன்வர் அவர்களை வரவேற்றவனாக, இந்த இடத்தில் அவரைப் பற்றி சில வார்த்தைகள் பேச வேண்டும். கடந்த 2017, 2018 இரண்டு ஆண்டுகளையும் ஒன்றிணைத்து நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை வீரமுனை வட்டாரத்தில் ஒரு வேட்பாளராக களம் இறங்கி, அந்த வெற்றியை ஈட்டுகின்ற சந்தர்ப்பத்தினை அடையாவிட்டாலும் அவருடைய அந்த அரசியல் எதிர்காலத்தை உற்றுநோக்கி, நாங்கள் நினைத்தோம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக நான்கு உறுப்பினர்கள் சபைக்கு வருகின்றார்களென்றால், இரண்டு உறுப்பினர்கள் பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்படுவார்கள். அதில் ஒருவர் கௌரவ உறுப்பினர் அன்வர் அவர்கள் வருவார்கள் என்ற ஒரு எதிர்பார்ப்போடு இருந்தோம். இருந்தாலும் அவரின் தார்மீகமான விட்டுக்கொடுப்பு பின்னர் இன்று இந்த சபைக்கு ஒரு உறுப்பினராக வருவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ் எல்லாவற்றையும் வல்ல இறைவன் பொருந்திக் கொள்வானாக.

கௌரவ தவிசாளர் அவர்களே இன்று உங்களுடைய கருத்தின்படி நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மிகப்பெரிய பொருளாதார ஸ்திரத் தன்மையின் அடிப்படையில் ஏறத்தாழ 7347 க்கு மேற்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்த உள்ளூராட்சி மன்றங்கள் கிட்டத்தட்ட 1552 மில்லியன் மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படுகின்ற ஒரு சந்தர்ப்பம் இருக்கின்ற சூழ்நிலையில் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த அமர்வோடு எமது சபை முடியும் என்ற எதிர்வுகூறல் ஒன்று இருக்கின்றது. ஆகவே இந்த சபை என்னைப் பொறுத்தவரைக்கும் ஒட்டுமொத்த இலங்கை திரு நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்த ஒரு சபை என நான் கருதுகின்றேன்.

பல்வேறுபட்ட இடங்களுக்கு செல்கின்ற போது இந்த சபையின் கௌரவமும் இந்த சபையினுடைய தவிசாளரின் முதன்மையும் நாங்கள் அறிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளது. ஆகவே கடந்த 2015 ஆம் ஆண்டு இந்த நாட்டினுடைய மிகப்பெரும் அரசியல் ஆளுமை மஹிந்த ராஜபக்ஷ என்கின்ற அந்த அரசியல் ஆளுமையிடமிருந்து நல்லாட்சி என்கின்ற போர்வையில் இந்த நாட்டிலுள்ள ஏனைய இதர அரசியல் கட்சிகளும் இணைந்து நல்லாட்சியை உருவாக்கி, அந்த நல்லாட்சியின் பிரகடனமாக 1979 ஆம் ஆண்டுக்கு முன் கௌரவ அதிமேதகு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் ஆட்சிக் காலத்தில் இருந்த தேர்தல்முறை போன்று இந்த நல்லாட்சியில் வட்டார அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்த உத்தியோகபூர்வமாக 2018ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் 27ஆம் திகதி இந்த சபையின் முதலாவது அமர்வு கூடியது. இந்த சபையிலே அரசின் பங்காளிகளாக இருந்த 03 கட்சிகளின் 20 உறுப்பினர்கள் அங்கம் வகித்தோம். UNP யின் 8 உறுப்பினர்களும், ACMC யின் 08 உறுப்பினர்கள் SLFP யின் 04 உறுப்பினர்களையும் கொண்டு 20 கௌரவ உறுப்பினர்களை கொண்ட இந்த சபை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த சபைக்கு நாங்கள் வருகின்ற போது இந்த சபையில் இம்முறையின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது உறுப்பினர்கள். பிரதேச சபை என்றால் இந்த ஊரின் உடைய மொத்த அபிவிருத்தியையும் இந்த சபையின் ஊடாக செய்யலாம் என்ற எண்ணத்தோடு வந்தோம். இருந்தாலும் எமது சபையை பொறுத்தவரையில் செலவீனங்கள் கூடிய ஒரு சபை. ஆகவே நாங்கள் வந்தபோது இந்த சபையின் ஊடாக எங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு சவாலாகவே இருந்தது. இருந்தாலும் இந்த சபையில் உள்ள உறுப்பினர்கள் அரசின் பங்காளிகளாக இருந்து சந்தர்ப்பத்தில் சகல உறுப்பினர்களும் அவரவர் சார்ந்த கட்சிகளின் ஊடாக அபிவிருத்தியை கொண்டு வந்த போது, எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி எந்தவித சலனமும் இல்லாமல் கௌரவ தவிசாளர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நாங்கள் எதிரணி உறுப்பினராக இருந்தாலும் அந்த அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கு இந்த சபை ஒரு முன் உதாரணமாக எங்களுக்கு வழிகாட்டிய ஒரு சபையாகவும், தவிசாளராகவும் இந்த சபை இடம்பெற்று வந்திருந்தது. குறிப்பாக என்னை பொருத்தவரைக்கும் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந்த சபைக்கு நாங்கள் வருகின்றபோது உள்ளூராட்சி மன்ற நியதியில் எதிர்க்கட்சி ஆளும் கட்சி என்ற ஒன்றில்லை.

இருந்தாலும் இந்தச் சபையிலே நாங்கள் எதிரணியாக இருந்த காலகட்டத்தில் என்னுடைய வட்டாரத்தில் செந்நெல் கிராமத்தில் ஆரம்பகட்ட வைத்தியசாலை கட்டடத்தை கொண்டுவருவதற்கு கௌரவ சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் அவர்களின் அமைச்சிலிருந்து நிதிகளைக் கொண்டு வந்தபோது, அந்த நிதியின் ஊடாக அந்த கட்டடத்தை கட்டுவதற்கு அந்த திணைக்களமும் இந்த ஊரில் இருந்த சில நிர்வாகிகளும் பாரிய தடைகளையும் சிக்கல்களையும் சவால்களையும் ஏற்படுத்திய போது, அவை அத்தனைக்கும் உண்மையாக எங்களுடைய தவிசாளர் இந்த சபையை வைத்து ஒரு அரசியல் செய்ய வேண்டும் என்ற ஒரு சிந்தனையோடு இருந்திருந்தால், உண்மையில் அந்த கட்டடம் கட்டி இருக்க முடியாது. அந்த வைத்தியசாலையின் இன்று இயங்கி இருக்காது. அவ்வாறு இருந்த ஒரு காலகட்டத்தில் இந்த சபையினால் என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அந்த உதவிகளை செய்து தனக்கு இருந்த அதிகாரங்களை பயன்படுத்தி உயர் அதிகாரிகளிடம் அது சம்பந்தமாக பேசி அந்தக் கட்டடத்தை கட்டுவதற்கு எனக்கு சகல சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி தந்தமைக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று நான் எதிர் அணியில் இருந்த போது என்னுடைய வட்டாரத்தில் மிகக் கூடுதலான வேலைகளை செய்து இருக்கின்றேன். அபிவிருத்தி என்றாலும் சரி, உள்ளக நிர்ணய வேலைகளாக இருந்தாலும் சரி, மக்களுடைய தேவைகளாக இருந்தாலும் சரி, அதிலும் ஆகக் கூடுதலாக இந்த சபையினுடைய வளங்களை பயன்படுத்திய ஒரு உறுப்பினர் என நினைக்கின்றேன். எங்களது செயலாளரின் அறிக்கையின்படி ஏறத்தாழ 327 மின்விளக்குகளை என்னுடைய வட்டாரத்தில் பொருத்தி இருக்கின்றேன். இந்த சபையின் கனரக வாகனங்களை 23 தடவைகள் பயன்படுத்தி இருக்கின்றேன். ஏனைய இந்த சபையின் அனைத்து வளங்களையும் என்னுடைய வட்டாரத்திற்கும் என்னுடைய மக்களுக்காகவும் மிகவும் சிறப்பாகவே பயன்படுத்தி இருக்கின்றேன். ஆனால் இந்த சபையின் நிதி மூலம் அபிவிருத்தி என்கின்ற வார்த்தைக்கே இடமில்லை எங்களது சபையினுடைய தவிசாளர் பொறுத்தவரையில். பல சந்தர்ப்பத்தில் நான் முரண்பட்டு இருக்கின்றேன் ஆனால், அதன்

பிரதிபலிப்புகளை நாங்கள் இன்று அவருடைய அரசியல் அனுபவம், அவருடைய தனிப்பட்ட தொழில் முயற்சிகளின் அனுபவத்தின் ஊடாக இன்று நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கும் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரு கால தேவையைக் கண்டிருக்கினறோம்.

நாங்கள் இந்த சபைக்கு வருகின்றபோது இந்த சபையினுடைய ஒட்டு மொத்த செலவாக 3.3 அல்லது 4 மில்லியன் பணம் ஒவ்வொரு மாதமும் தேவைப்பட்டு கொண்டிருந்தது. நாங்கள் தவிசாளரிடம் மிகவிலாவாரியாக சபையில் இருந்த உறுப்பினர்கள் எல்லோரும் கேட்டோம். இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று. இந்த ஊரில் எத்தனையோ தேவைகள் இருக்கின்றதென்று. ஆனால் இன்று அந்த நிலை மாறி மாதம்தோறும் 5.2 மில்லியன் அல்லது 5.3 மில்லியன் ஒரு மாதத்திற்கு சராசரியாக செலவிற்காக தேவைப்படுகின்றது. ஏறத்தாழ 2.5 அல்லது 2.6 மில்லியன் பணம் தற்காலிக அடிப்படையில் வேலை செய்கின்ற சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவாக தேவைப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் இந்த சபை இயக்கப்பட்ட 51 அமர்வுகளிலும் நாங்கள் அபிவிருத்திக்காக காசு கேட்காத அமர்வுகள் இருக்க முடியாது. இந்த சபையினுடைய செலவீனங்களை கருத்தில் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்கள் ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்பே எங்களுடைய வரவு செலவுத்திட்டம் தீர்மானிக்கப்பட்ட போது இன்று இருக்கின்ற இந்த நிலைமையை தெளிவாக விளங்கப்படுத்தியிருந்தார். இது தான் நாட்டின் உடைய நிலைமை நாங்கள் இறுதிக்கட்டத்தை அடைந்தபோது இந்த சபையினுடைய நாளாந்த நடவடிக்கைகளுக்கு கூட இந்த சபையில் பணம் இருக்காது என நினைக்கின்றேன் என்று கூறியிருந்தார்கள். அது இன்று நிரூபணமாகியுள்ளது. நாங்கள் அன்று திட்டமிட்டபடி ஆகக் குறைந்தது ஐந்து வட்டாரங்களுக்காவது ஒவ்வொரு பாதையை அமைக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்த போது அதனை கௌரவ தவிசாளர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த சபைக்கு நாங்கள் எதற்காக வந்தோம் எங்களை மக்கள் எதற்காக இந்த சபைக்கு அனுப்பினார்கள் என்ற கேள்வியை தவிசாளர் இடம் கொடுத்தோம்.

கௌரவ தவிசாளர் அவர்களின் ஒரே ஒரு பதில் இன்றைய நிலைமையை தான் அன்றும் கூறினார். ஆக ஒட்டு மொத்தத்தில் இந்த சபை கௌரவ தவிசாளர் அவர்களின் கண்காணிப்பின் கீழ் ஏறத்தாழ 05 வரவு செலவுத் திட்டங்களும் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் ஏகமனதாக நிறைவேற்றிய ஒரு சபையாக இந்த இலங்கைத் திருநாட்டில் சம்மாந்துறை பிரதேச ஆகவே இருக்கும். எனவே நாங்கள் இதில் முட்டிமோதிக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை. நாங்கள் இன்று ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு முன்பே இந்த சபையை விட்டு வெளியேறுவோம் என்ற சந்தோசமான செய்தியோடு இந்த சபையினுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் காத்திருந்தோம். இன்று இந்த சபை கலையப்படுமாக இருந்தால் ஏறத்தாழ ஐந்து வருடங்கள் இந்த மாகாணத்தின் முழு அதிகாரம் ஒருவருடைய கையில் இருப்பது போன்று, இந்த ஊரினுடைய இந்த சபையினுடைய அதிகாரம் கௌரவ செயலாளர் அவர்கள் கையில் ஒப்படைக்கப்படும். அவ்வாறு ஒப்படைக்கப்படும் போது செயலாளர் எந்த சஞ்சலமும் இல்லாமல் இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளை கொண்டு செல்ல வேண்டும் என்பதனை நாங்கள் விரும்புகிறோம். அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் கௌரவ தவிசாளர் அவர்களின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு இந்த சபையினுடைய பணத்தினை தேவைக்கேற்றவாறு மிக முக்கியமான தேவைக்கு முதல் இடம் கொடுத்து செலவினம் செய்து வந்திருந்தோம்.

இன்று சபை கலையப்பட்டு நாங்கள் வெளியே சென்ற போது இந்த சபையினுடைய நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கு இங்கு பணம் இல்லாமல் இருந்திருந்தால், இன்று ஒட்டுமொத்த நாடும் சர்வதேசமும் இந்த நாட்டினுடைய ஆட்சியாளர்களைக் கூறுவது போன்று எம்மையும் எமது மக்கள் கூறியிருப்பார்கள். இந்தத் திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் நிறப்புவதற்கு காசில்லை என்றால் இந்த ஊரின் நிலைமை என்னவாகும். இந்த ஊரினுடைய நகரத்தின் நிலைமை என்ன? அவ்வாறு பார்க்கின்ற போது இந்த மக்கள் யாரிடம் கேள்வி கேட்பார்கள், யாரை நோக்கி விரல்களை நீட்டுவார்கள். ஏறத்தாள எங்களுடைய வீடுகளும் கல்லெறிகளுக்கு உட்பட கூடிய சூழ்நிலை வந்திருக்கும். ஆகவே அவ்வாறான ஒரு கட்டத்தில் இருந்து இந்த கௌரவ உறுப்பினர்களை பாதுகாத்த பெருமை எமது கௌரவ தவிசாளர் அவர்களை சேரும் என்று கூறி, இந்த சபை இறுதி சபையாக இருக்குமாக

இருந்தால், நான் இந்த சபைக்கு புதிய ஒரு அங்கத்தவராக வந்து இந்த சபையினூடாக இந்த ஊருக்காக நான் கொண்டுவந்த அபிவிருத்திகளை எந்த ஒரு சலனமும் இல்லாமல் நிறைவேற்றுவதற்கு உதவிய இந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி, சபையினுடைய செயலாளர் அதேபோன்று இந்த சபையில் இருக்கும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், இதர உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் என்னுடைய முயற்சிக்கு எந்தவிதமான ஒரு சஞ்சலமும் இல்லாமல் பாரிய பங்களிப்பு செய்தவர்கள் என்று கூறி கௌரவ தவிசாளர் அவர்களே விடை பெறுகின்றேன் அஸ்ஸலாமு அலைக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எமது சபையின் 51வது அமர்வுக்காக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டு வருகை தந்திருக்கும் எம்முடைய ஏ.எச் அன்வர் கௌரவ உறுப்பினர் அவர்களை வாழ்த்தி வரவேற்றவனாகவும், அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டு இருந்தாலும் இந்த ஊரின் அபிவிருத்தியில் அரசியலில் தன்னாலான முழு முயற்சியையும் முழு இயலுமையையும் சாதித்து இந்த ஊருக்கு வேண்டிய அபிவிருத்திகளையும் வளங்களையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று வேண்டியவனாகவும், எமது சபையினுடைய 51வது அமர்வின் ஒரு புதிய அங்கத்தவராக இருந்தாலும் அவர் எதிர்காலத்தில் தங்களது திறமைகளை திறம்படச் செய்ய வேண்டும் என்று வேண்டி, இங்கு கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களினால் முன்வைக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டு என்றுதான் அதைச் சொல்ல வேண்டும், ஏனென்று சொல்லியிருந்தால் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த அந்த வளவில் பல கடிதங்கள் பல நிறுவனங்கள் ஊடாக பிரதேச செயலகம், பிரதேச சபை, இணக்க சபை போன்ற இடங்களில் பல தரப்பட்ட விசாரணைகள் நடவடிக்கைகள் இடம்பெற்றிடிருந்தது கூட இந்த சபையில் ஒரு நடவடிக்கையும் செய்யவில்லை என்று முற்றாக மறுப்பது மனவேதனையை தருகின்றது. இருந்தாலும் அவருக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் எல்லா உறுப்பினர்களுக்கும் எந்தவித மாற்று கருத்தும் இல்லை. அதனை நீதியான முறையில் சரியான முறையில் நடை பெற வேண்டும் என்பதுதான் எமது எல்லோருடைய வேண்டுகோள்.

இதற்கு தீர்மானத்திற்கு வருவதற்கு முன் இதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்து. அந்த குழு எங்களுடைய கௌரவ உப தவிசாளர் அவர்களின் தலைமையில் கௌரவ உறுப்பினர்களான நளீம், சியாமா போன்றவர்கள் சென்று பார்வையிட்டு இருக்கிறார்கள். அதில் தீர்வு கிடைக்கப் பெற்றிருக்கும் அதில் உங்களுடைய சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கும் என்று நினைக்கின்றேன். இதில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என சபை ஊழியர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எதுவும் செய்யவில்லை என்று கூறுவதை முற்றாக நான் மறுத்து, அவருக்கு தீர்வுகள் விரைவாக வழங்கப்பட வேண்டும் என்று வேண்டியவனாவும்,

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பொதுச்சந்தையில் ஒரு மீன் சந்தை இருக்கின்றது. இப்போது இந்த மீன் சந்தை சம்மாந்துறையில் 16 இடங்களில் இயங்குகின்றது. வண்டு சந்தியில், உடைந்த பாலத்து சந்தியில், மக்கள் வங்கி முன்பாக, விளினையடி சந்தி, தாறுஸ்ஸலாம் பாடசாலை முன் போன்ற நிறைய இடங்களில் மீன் சந்தைகள் இயங்குகின்றது. இவ்வாறு கலைந்து இயங்குவதால் எமக்கு கிடைக்க கூடிய நன்மைகளை விட தீமைகளே அதிகமாக காணப்படுகின்றது. எல்லா இடங்களிலும் வித்துவிட்டுச் செல்வதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. சந்தையில் விலைநிர்ணயம் செய்ய முடியாத ஒரு இக்கட்டான நிலை மக்களுக்கு. எல்லோரும் கண்ட கண்ட இடங்களில் மீன் விற்பதனால் அவர்கள் விரும்பிய விலைக்கு விற்றுவிட்டுச் செல்கின்றார்கள். இந்த மீன்சந்தைகள் எல்லாம் ஒரு இடத்தில் இயங்குவதற்கு இந்த சபை ஒரு நல்ல முடிவை அவசரமாக எடுக்க வேண்டும் என்று கூறி, இப்படியான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது நாம் நிறைய விஷயங்கள் பேசி சபையை புகழ்ந்து இருக்கின்றோம், சபை நடவடிக்கைகளை சொல்லியிருக்கின்றோம், எதிர்கால நடவடிக்கைகளை பற்றி பேசியிருக்கின்றோம், சபை இந்த ஊருக்குத் தேவையான அனைத்தையும் செய்துவிட்டுச் செல்கின்றோம் என்ற ஒரு திருப்தியான ஒரு மனநிலையோடும், இவ்வாறான நிலையில் சீர்கேடுகளைக் களைந்து எமது கௌரவத்தைப் பேணுமாறு கூறி விடைபெறுகிறேன் நன்றி.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எங்களது கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் புதிதாக எமது சபைக்கு வந்து இருக்கின்றார். அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் விட்டால் எமக்கு கவலை அவருக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அவருடைய வட்டாரத்தை அவர் புரட்டி வைப்பார். அவ்வாறான ஒரு வல்லமை உள்ளவர். அவர் இந்த சபைக்கு வருவதற்கு முன்பும் அதிகமான அபிவிருத்திகளை செய்திருந்தார். அதிகமானவர்களுக்கு அவர்களிடம் ஒருவர் வந்து சாப்பிடுவதற்கு எதுவும் இல்லை என்று கூறினால் தெரிந்தும் தெரியாமலும் அள்ளிக் கொடுக்கக் கூடிய ஒரு வல்லவர். அவ்வாறான ஒருவர் இந்த சபைக்கு வந்தது ஒரு பெருமையாக இருக்கும். ஏதோ அல்லாஹ் இந்த சபையை அவருக்கு நீடிக்க வேண்டும். இந்த சபையில் குறைந்தது இரண்டு மாதமாக இருந்தால் அவர் தன்னுடைய வேலையை காட்டுவார். அவரைப் பெற்றெடுத்த பெற்றோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து,

எனது வட்டாரத்தில் கருத்திட்ட வீதி என்ற அந்த வீதியில் ஒப்பந்தகாரர்கள் வடிகானை அமைத்து இரண்டு வருடங்களாகப் போகின்றது. அந்த வடிகான்கள் 3 அடி உயரத்தில் காணப்படுகிறது. அந்த கடப்பினால் மக்கள் செல்வது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அந்த வீதியை சபை கலைவதற்கு முன்பு அதனை செப்பனிடுவதா? அல்லது அதனை கைவிடுவதா? என்று கௌரவ தவிசாளர் அவர்கள் நீங்களே நேரடியாகச் சென்று பாருங்கள். அந்த வீதி மிகவும் மோசமாக காணப்படுகின்றது. அந்த வீதியில் வருவதற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மக்கள் அந்த வடிகானை உடைக்கவா என்று கேட்கிறார்கள். இதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு கூறி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே இந்தக் கருத்திட்ட வீதி மட்டுமல்ல சம்மாந்துறையில் இருக்கின்ற ஒப்பந்தம் செய்யப்பட்ட அனைத்து வீதிகளும் இந்த மாதம் 5 ஆம் திகதிக்குள் முடிவடைகின்றது. முடிவடைவதை நவலோக்காகவுக்கு வழங்கக் கூடாது என்று தலைமை பொறியாளர் கடிதம் வழங்கி இருக்கின்றார். ஆனால் அவர்கள் மேலிடத்திற்கு சென்று சந்தித்து அவர்கள் இந்த இரண்டு மாதங்களுக்குள் வேலையை முடிக்க வில்லை என்றால் ஒரு நாளைக்கு 05 மில்லியன் பணம் தண்டப்பணமாகக் கட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. மாகா நிறுவனம் கையை வைத்து அது முழுமையாக முடிவடைந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் குறிப்பிட்ட ஒரு விடயம் நான் இந்த சபையின் வரவேற்புக்காக இதனை கதைக்காமல் விடுபட்டு விட்டது. ஒரு நல்ல சிறந்த இடத்தில் இருக்கின்ற எமது சம்மாந்துறை பொதுச் சந்தை எமது காலத்திற்குள் மூடப்பட்டதாக கதை வந்து விடக்கூடாது. ஏனென்று சென்னால் மீயன்னாட சந்தி, கைகாட்டி சந்தி, போன்ற தொடர் சந்திகளில் மீன் விற்பவர்களுக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கியும் அதனை அவர்கள் புறக்கணித்து இருக்கிறார்கள்.

இராணுவத்தைக் கொண்டு சென்றாவது அவர்களை மீன் சந்தைக்குள் கொண்டு வர வேண்டும். சம்மாந்துறை மட்டும்தான் இரவு 8 மணிவரையும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் பொதுச் சந்தை. அந்த மார்க்கெட்டில் மீன் விற்பவர்கள் 12 மணிக்குப் பிறகு வெளியில் சென்று மீன் விற்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. நாங்கள் பொதுச் சந்தையில் ஒழுங்காகக் காசை அறவிடுகின்றோம் ஆனால் அங்கு எந்த வியாபாரிகளுக்கு இல்லாமல் காணப்படுகின்றது. அதிகமான கடைகள் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது நான் அடிக்கடி சென்று அங்கு பார்ப்பேன். செல்கின்ற அந்த பாதையை செப்பனிட்டு நல்ல முறையில் செய்ய வேண்டும். இந்த சந்தையைப் பொருத்த வரையில் எமது காலத்திற்குள் இந்த சந்தையை மீண்டும் உள்ளே கொண்டுவந்து எல்லோரும் ஒரே இடத்தில் மீன் விற்கின்ற ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். 46 மீன் வியாபாரிகள் வந்து மீன் விற்பனை செய்கின்றார்கள். எல்லோரும் வருகின்ற போது அவர்களுக்கான வாகன தரிப்பிட வசதி இல்லாமல் காணப்படுகின்றுத. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு

குறிப்பிட்ட இடம் என்றால் பரவாயில்லை. இவர்கள் அதிகாமன இடங்களில் விற்பனை செய்கின்றார்கள். கொவிட் 19 இனால் கட்டுப்படுத்தியதனால் அது தொடர்ச்சியாக பாவனையில் வந்து விட்டது. வெளியில் விற்பது. இதனை தொடர்ந்து அனுமதிக்க முடியாது. கௌரவ உறுப்பினர் கூறியது போன்று இதனை புனர்நிர்மாணம் செய்து வழங்க வேண்டும். இல்லை என்றால் ஒரு அருமையான பொதுச்சந்தை எமது காலத்திற்குள் அழிந்து போனதாக வந்துவிடக் கூடாது எனக் கூறி சந்தர்பத்திற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

### கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலூவ்பா

கௌரவ தவிசாளர் அவர்களே நான் உங்களிடம் இந்த இடத்தில் ஒரு அனுமதி ஒன்று கேட்க விரும்புகின்றேன் கௌரவ உறுப்பினரின் வரவேற்புக்குப் பின்பு மூன்று நிமிடங்கள் எனக்கு உரையாற்றுவதற்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே இந்த சபை அமர்வுக்கு வந்திருக்கின்ற கௌரவ உறுப்பினர் ஏ.எச். அன்வர் அவர்களை இந்த சபைக்கு வரவேற்றவராகவும், அவர் எனது குடும்ப உறவினர் அவரை எனது குடும்பம் சார்பாகவும் வரவேற்றுக் கொண்டு, சம்மாந்துறையில் சேவையாற்றுவதற்காக கடந்த தேர்தலில் போட்டியிட்டாலும் கூட அவருக்கான இந்த வாய்ப்பு ஆரம்பத்தில் கிடைக்காவிட்டாலும், இறைவனுடைய நாட்டப்படி அவருடைய முயற்சியை அல்லாஹ் கை விடாமல் இறைவன் அவரை இந்த இடத்திற்கு கொண்டு வந்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறி உங்களுடைய அனுமதி கிடைத்தால் மேலதிக விடயங்களை பேசுவேன் அவ்வாறு இல்லை என்றால் எனக்கு பிறகு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா

கௌரவ தவிசாளர் அவர்களே இங்கு முதல் வருகையாகவும், எங்களுடைய கௌரவ தவிசாளர் கூறியிருக்கின்றார் சில நேரம் இது இறுதியாக இருக்கலாம் என்று. இது இறுதியாக இருந்தாலும் அவருக்கு முதல் படியொன்று கிடைத்துள்ளது அவருடைய அரசியல் வாழ்விற்கு. இதில் இருந்து அது அவருடைய அரசியல் பயணம் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த 20 பேர் கொண்ட கௌரவ உறுப்பினர்களின் சார்பாகவும், இந்த ஊர் மக்கள் சார்பாகவும், இந்த பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் சார்பாகவும் எங்களுடைய கௌரவ புதிய உறுப்பினர்கள் ஏ.எச்.அன்வர் அவர்களை வருக வருக என வரவேற்று அவருடைய பயணம் இன்னும் தொடர வேண்டும் என்று கேட்டு துஆ பிரார்த்தனையோடு முடித்துக் கொள்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்

கௌரவ தவிசாளர் அவர்களே 04 வது சபையின் 51 வது சபை அமர்வுக்கு வருகை தந்திருக்கின்ற எமது புதிய கௌரவ உறுப்பினர் ஏ.எச். அன்வர் அவர்களை வருக வருக என்று இந்த சபையின் சார்பாக வரவேற்கின்றேன். அத்தோடு எங்களது இந்த சபையானது எங்களது தவிசாளரின் மேற்பார்வையில் நடந்து கொண்டிருக்கின்றது. இங்கு எந்த வித இன மத வேறுபாடுகளும் இன்றி நாங்கள் ஒற்றுமையாக நடந்து கொண்டு இருக்கின்றோம். அத்தோடு இங்கிருக்கின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எங்களுக்கு எந்தவிதமான மனக் கஷ்டங்களையும் தரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு, ஒரு சிறிய வேண்டுகோளையும் கூறி முடித்துக் கொள்கிறேன். எனது வட்டாரத்தில் இந்த நடைபாதை வியாபாரிகளின் தொல்லை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அங்கு இருக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றத்தான் அந்த சந்தை அமைத்துக் கொடுத்தோம். அந்த சந்தையில் வியாபாரம் பொருட்களை விற்பதற்கு முதல் நாளே நடைபாதை வியாபாரிகள் வந்து பொருட்களை விற்கின்றார்கள். அதனால் அந்த சந்தையில் வியாபாரமும் குறைவாகக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலைமையை மாற்ற வேண்டும் இதற்காக அங்கு உள்ள ஊழியர்களை பயன்படுத்தி நடைபாதை வியாபாரிகள் செயற்பாட்டை குறைக்க வேண்டும் என்று இந்த சபையிடமம் தவிசாளரிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்**

கௌரவ தவிசாளர் அவர்களே இன்று இந்த சபைக்கு சமூகமளித்திருக்கின்ற எமது கட்சியின் அங்கத்தவர் ஏ.எச். அன்வர் அவர்களை எனது கட்சி சார்பாகவும், எனது சபை சார்பாகவும் வரவேற்றுக் கொள்வதோடு, நான் இன்றைய சபைக்கு வந்து ஒரு வருடங்கள் பூர்த்தி ஆகி விட்டது என்னைப் போன்று அவரும் வருகை தந்திருக்கின்றார். அவரும் நீடித்து வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டும் சபையின் சார்பாக எனக்கு ஒத்துழைப்பு வழங்கியது போன்று அவருக்கும் ஒத்துழைப்பு நல்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு வாய்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்த சாமி அவர்கள்**

கௌரவ தவிசாளர் அவர்களே இந்த இடத்திற்கு தாமதமாக வருகைதந்மைக்காக முதலில் மண்ணிப்புக் கோரியவனாக, புதிதாக வந்திருக்கின்ற கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்களை வரவேற்றவனாக தன்னுடைய பணியை இவர் சபைக்கு வருவதற்கு முன்பே ஆரம்பித்து விட்டார். இவர் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்குவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. சென்ற நோன்புப் பெருநாள் காலத்திலே களியாட்டங்களை நடாத்துவதற்காக இளைஞர்களோடு ஒன்றிணைந்து அவர்களைப் போன்று இணைந்து போன்று சுறுசுறுப்பாக இயங்கி அதனைச் செயற்படுத்தி வைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதே போன்று எதிர்காலத்திலும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் எங்களது பிரதேசத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்று கூறி கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

கௌரவ உறுப்பினர்களே நமது புதிய உறுப்பினர் கௌரவ அப்துல் ஹமீத் அன்வர் அவர்களை வரவேற்று, நீங்கள் கூறிய கருத்துக்களை உள்வாங்கியவனாக, அப்துல் ஹமீத் அன்வர் அல்லது றமீஸ் என்றழைக்கப்படும் கௌரவ உறுப்பினருக்கும் எனக்கும், அவர் பாடசாலை செல்வதற்கு முன்பு இருந்த தொடர்பு உள்ளவராக இருந்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் எனது பொது வாழ்க்கையில் 1989ஆம் ஆண்டு அறிமுகமான காலத்திலிருந்து எனது சகல அரசியல் நடவடிக்கைகளிலும் ஒரு கட்டுப்படாத ஒரு போர் வீரராக செயற்பட்ட ஒருவர். உறுப்பினர் அன்வர் அவர்கள் சென்ற தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு நான் போட்டியிட்ட வட்டாரத்திலேயே அவர் எனது வாக்கு வங்கியின் ஒரு பகுதியே சூறையாடிய ஒரு வேற்பாளராக இருந்தாலும், ஏனென்றால் அந்த சொற்பாவனைக்குக் காரணம் அவரின் குடும்பமும் எங்களது குடும்பமும் பல வழியில் மிகவும் நெருக்கமாக பழகிய குடும்பங்கள் என்ற படியினால், அவரின் குடும்பத்திற்குள் வளமையாக நான் நம்பி இருக்கும் வாக்கு வாங்கிக்குள் எனக்கு தைரியமாக போக முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி ஒரு வேட்பாளராக இருந்தும் தேர்தல் காலம் முடிந்ததும் வழமைபோல் இந்த ஊரின் புது அரசியல் கலாசாரப்படி எந்த ஒரு பிரிவினையும் இல்லாமல் அவர் ஆளும் கட்சியில் ஒரு அமைப்பாளராக இருந்து ஊர் மக்களுக்கு எமது தொகுதி அமைப்பாளர் உப தவிசாளர் கௌரவ அச்சி முஹம்மட் அவர்களோடு இணைந்து செயலாற்றியதை நீங்கள் எல்லோரும் கூறியிருந்தீர்கள். துரதிஷ்டவசமாக நீடிக்கப்பட்ட சபையின் அங்கத்தவராக இணைந்து இருந்தும் சில வேளைகளில் நமக்கு இன்னும் ஓரிரு மாதங்களில் சபை அமர்வுகள் தொடருமானால் நிச்சயமாக அவரின் பங்களிப்பு இந்த சபையில் இருக்கும். உங்கள் எல்லோரும் சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் அப்துல் ஹமீத் அன்வர் என அழைக்கப்படும் றமீஸ் அவர்களை இந்த சபைக்கு உறுப்பினராக வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். வேறு விடயங்கள் ஏதாவது இருந்தால் சுருக்கமாக உரையாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களின் பிரச்சினை சம்பந்தமாக எமது கௌரவ உப தவிசாளர் தலைமையில் நானும் எமது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களும் இந்த விடயத்தை பார்வையிடச் சென்றிருந்தோம். எனக்கு ஞாபகம் இருக்கின்றது இருவருடைய கேட் வாயிற் படலங்களும் அருகில் இருந்ததினால், இவர்கள் ஏற்கனவே

முரண்பட்டு இருப்பதனால் இவர்களை சமாதனப்படுத்த வேண்டும் என்பதற்காக, இவர்களை ஒரு அடி தள்ளி இருவரினதும் கேட் வாயில் படலத்தை அமைக்குமாறு கூறி இருந்தோம். அதன்பின் என்ன நடந்தது என்று தெரியாது. அவருடைய இந்தப் பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, HNB வங்கிக்கு முன்பாக இருக்கின்ற எம்முடைய டீ.சீ. குவாட்டஸ் வீதி சம்பந்தமாக, அந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 22 இலட்சம் ரூபா கொண்டு வந்திருந்தேன். அதன் போது வழக்கு பிரச்சனையாக இருப்பதால் அந்த வழக்கு தீர்ப்பு கொவிட் காரணமாக இன்னும் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்பட்டது. அதே இடத்தில் சட்டத்தரணி கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களிடம் நீங்கள் வேண்டிக் கொண்டீர்கள் ஏனைய விடயம் சம்பந்தமான சட்டத்தரணிகளையும் நீதிபதியையும் சந்தித்து இதற்கான தீர்ப்பை அவசரமாக வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கச் சொன்னோம். அதற்கு என்ன நடந்திருக்கின்றது என்பது தெரியவில்லை.

அடுத்ததாக தைக்கா தெற்கு வீதி சம்பந்தமாக, அதன் நிலைப்பாடு என்ன என்பதும் தெரியவில்லை. எமது சபைக் காலத்திற்குள் என்ன செய்து முடித்திருக்கின்றோம் என்கின்ற விடயம் எமது சபைக்குத் தெரிய வேண்டும். அதேபோன்று எமது சில்வாவின் மடு வண்டு அபிவிருதி செய்ய ஆரம்பித்து அது நிதி இல்லாத காரணத்தினால் விடுபட்டு விட்டது. அது தொடர்ந்து செய்யக் கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை இனிமேலாவது அந்த வாய்ப்பு கிடைத்தால் அல்லது எங்களுடைய சபை உறுப்பினர்கள் இந்த மாதத்திற்கான கொடுப்பனவை தியாகம் செய்தால் அதற்குரிய செலவை அந்த வட்டாரத்தின் உறுப்பினர் தலைமையில் அதனைச் செய்யலாம்.

பொதுச் சந்தையில் மீன் விற்பனை செய்வதைக் கவனித்தால் வாகன விபத்துக்கள் உண்டாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளது. வீதியில் நின்றுகொண்டே மீன் விற்பனை செய்வதால் வாகனங்கள் செல்வதற்கு வழி இல்லை. அதற்கு ஒரு மாற்று வழியை பயன்படுத்தி செய்ய வேண்டிய நடவடிக்கையை எடுத்து அதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்க வேண்டும். அடுத்ததாக எல்லோரும் எமது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் இந்த சபையின் அதிகப்படியான பணத்தை அவருடைய வட்டாரத்திற்கு செலவு செய்ததாக பேசியிருந்தார். மகிழ்ச்சி. ஆனால் வட்டார ரீதியில் வட்டாரம் வேறு வேறுதான். இது சம்மாந்துறை, அந்த வகையில் நமது உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி அந்த பின்தங்கிய கிராமத்தை முன்னேற்ற வேண்டும் என்று யாரும் அதில் குளறுபடிகள் இல்லாமல் நாங்கள் விட்டுக்கொடுப்புடன் அதைச் செய்தோம். அதற்கு அவர் எமக்கு நன்றி கூறியிருந்தார். அதற்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

என்னால் செய்யப்படுகின்ற அபிவிருத்திகள். பல வட்டரங்களில் நான் அபிவிருத்திகளை செய்திருக்கின்றேன். இது வரைக்கும் நான் அபிவிருத்தி செய்த காலத்திற்கு இந்த சபையில் எழும்பி இந்த வேலைக்கு இவ்வளவு ரூபாய் கொண்டு வந்துள்ளேன் என்று இதுவரைக்கும் எதுவும் பேசவில்லை. இப்போது எங்களது உப தவிசாளர் பேசியிருந்தார் அபிவிருத்திகளை கொண்டு வந்திருக்கின்றேனென்று. கௌரவ உறுப்பினர்கள் அவரவர் வடாரத்திற்குள் ஒத்துழைப்புக்களை வழங்கினார்கள். அடிக்கல் வைப்பது என்று ஒன்றுக்குத்தான் அடிக்கல் வைத்தேன். திறப்பு விழா செய்வதற்கு எல்லோரையும் அழைத்தேன். யாரும் வரவில்லை அதற்குப் பிறகு நடந்த நிகழ்வுகளுக்கு நான் யாரையும் அழைப்பதை விட்டு விட்டேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த ஜனாதிபதித் தேர்தல் வரப்போகிறது என்று சொன்னபோது எங்களது தலைமைத்துவம் என்ன முடிவெடுக்க போகின்றது என்று பார்த்தேன். இரண்டு முஸ்லிம் தலைவர்களின் முடிவை பார்த்தால் முடிவு வேறு மாதிரியாக இருந்தது. எனக்குத் தென்பட்டது கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வெல்லப் போகின்றார்கள் என்று. ஒரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் இரண்டு சிங்களவர்கள். அதில் யார் வெற்றி பெற்றாலும் எமது சமூகம் அவர்களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டும். அந்த அமைப்பின் கீழ் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது, ACMC யின் தலைவர் ரிசாத் பதியுதீன் அவருக்கும் எனக்கும் இந்த ஊருக்காக அவரிடம் விவாவித்த போது அவருடன் ஒரு முரண்பாடு ஏற்பட்ட காரணத்தினால் கௌரவ முன்னாள் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ ஊடாக எனக்கு ஒரு அழைப்பு வந்தது ரிசாத் பதியுதீன் மீது கொண்ட கோபத்தினால் நான் அவருடன் சென்றேன். கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வெற்றி அடையப் போகிறார்கள் என்று எனக்கு தெட்டத் தெளிவாகத் தோன்றியது. முன்னாள் பிரதம

மந்திரி மஹிந்த ராஜபக்ஷ உடன் பேசினேன் எதிர் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் எனக்கு தேர்தல் கேட்பதற்கான வாய்ப்பு தருவீர்களா என்று கேட்டேன். அதற்கு ஆம் என்று சொன்னார். ஆகவே நான் அவருக்கு வேலை செய்தேன். எனது ஊருக்காக, எமது ஊருக்கு, எமது சமூகத்திற்கு என்று பிரச்சினை ஒன்று வருகின்றபோது நான் அந்த சார்ந்த ஆட்சியில் இருந்தால் நமது சமூகத்திற்கு உதவ முடியும் என்ற நம்பிக்கையில் நான் அவர்களுடன் இணைந்தேன். இந்த ஊர் மக்கள் எல்லோரும் ஒரு பக்கமாக இருந்தார்கள். நானும் என்னை நம்பியவர்களுடனும் தைரியமாக இந்த ஊரில் அந்த அரசியலை செய்து காட்டினேன். என்னை இந்த ஊர் மக்கள் எதுவும் செய்யவில்லை. ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எனக்கு தந்த வாக்குறுதியின் படி எனக்கு பாராளுமன்ற தேர்தல் கேட்பதற்கான வாய்ப்பைத் தந்தார்கள்.

நான் தேர்தலுக்கான கையொப்பத்தை இட்டதும் முதன் முதலாக உடனடியாக எனது தாய்க்கோ அல்லது எனது மனைவிக்கோ சொல்லாமல் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அவரிடம் சொன்னேன். அவருடன் ஆசீர்வாதத்தை பெற்றேன். இரண்டாவதாக நான் கூறியது கௌரவ முன்னால் மாகாண சபை உறுப்பினர் அமீர் TA அவர்களுக்கும். நான் ஊருக்கு வந்தும் எனது பெற்ற தாயை சந்திக்கப் போகவில்லை கௌரவ தவிசாளர் அவர்களைத்தான் சந்திக்கச் சென்றேன். பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்கள் செய்த போதிலும் எந்த ஒரு சிங்கள சகோதர வேற்பாளர்களைக் கூட்டிக் கொண்டு வராமல் நான் தன்னந்தனியாக நின்று நானே பிரதம அதிதியாக இருந்து இந்த சம்மாந்துறையில் என்னாலும் முடியும் என்பதை நான் இந்த ஊர் மக்களுக்கு செய்து காட்டினேன். தற்போது நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நடக்கும் என்று எனக்கு தெரியாது. 1972 ஆம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் நடந்த பிரச்சினைகள் போன்றதே அது. தெரியாது. இதனை நான் இவ்விடத்தில் பேசவில்லை. அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஸ அவர்கள் உள்நாட்டு உற்பத்தியை செய்யப்போவதாகக் கூறி அவர் இறங்கியதால் இவ்வாறான ஒரு பிரச்சினை எற்பட்டுள்ளது. துரதிஸ்டவசமாக யார் யார் எவர் என்ன பிழை செய்வார்கள் என்று எவருக்கும் தெரியாது. எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. பொது ஜன பெரமுன கட்சியில் பாராளுமன்றத் தேர்தல் கேட்பதற்கு, ஆனால் இந்த ஊர் எனக்கு 1800 வாக்குகள் தான் அளித்தது. எனக்கு வாக்களிக்காத இந்த ஊர் மக்கள் யாரையும் நான் கோபிக்கவில்லை. எவர் என்னிடம் வந்தாலும் என்ன உதவி கேட்டு வந்தாலும் அவரை புன்முறுவலுடன் வரவேற்று உதவி செய்தேன். எந்தெந்த இடமாற்றம் பெற்றுத்தருமாறு வந்தாலும் சரி, பதவிஉயர்வு பெற்றுதாருமாறு வந்தாலும் சரி என்னால் முடிந்த உதவிகளை நான் அவர்களுக்கு செய்து கொடுத்துள்ளேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த ஊர் மக்கள் எனக்கு வாக்களித்ததை விட நான் இந்த ஊருக்கு அளப்பரிய சேவைகள் செய்து உள்ளேன். நான் இந்த ஊருக்கு செய்ய வேண்டும் என்பதற்காக செய்துள்ளேன். நான் மீண்டும் அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யவில்லை. நான் எந்த நேரமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றவன். ஆனால் என் மரணத்துக்கு பின் எனது பெயர் பேசப்பட வேண்டும். இந்த ஊர் மக்கள் எனக்காக துஆ செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த வேலைகளை செய்துள்ளேன். இதுவரைக்கும் எனது அபிவிருத்தி விடயங்கள் சம்பந்தமாக எதுவும் எந்த சபையிலும் எங்கும் பேசப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் ஆனால் அந்த பாதைகளை செய்து அந்தப் பாதை ஓரத்தில் நாட்டப்பட்ட எனது கட்டவுட்கள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து உள்ளார்கள். இப்போது அமைதியாக இருக்கும் ஊரை குழப்புவதற்காக முகப்புத்தக வாயிலாக என்னைத் தாக்குவதற்காக, எனது வீட்டை பற்ற வைப்பதற்காக இந்த ஊரில் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. கௌரவ தவிசாளர் அவர்களே நான் தெரியாமல் கேட்கின்றேன் இவர்கள் எனக்கு 1800 வாக்களித்ததினால் இந்த ஊருக்கும், இந்த நாட்டுக்கும் அல்லது எமது சமூகத்திற்கும் நான் செய்த பிழைதான் என்ன? ஏன் என்னைத் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு வரவேண்டும். நான் மக்களுக்காக எனது ஊருக்காக, பல சேவைகளைச் செய்த என்னைத் தாக்குவதற்கு பல பல திட்டங்கள் தீட்டப்படுகின்றது. தொலைபேசிகள் மூலம் அழைப்புகள் வந்தது இப்படித் திட்டம் இடுகின்றார்கள் என்று. கௌரவ தவிசாளர் அவர்களே நான் பிறப்பதற்கு முதலில் எனது மரணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனக்கு இப்படித்தான் மரணம் வரும் என்று ஏற்கனவே இறைவனால் எழுதப்பட்டுள்ளது. என்னுடைய மரணம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே நடக்கும். நான் ஓடி

ஒழியவில்லை. ஆனால் எனது வீட்டைப் பற்ற வைத்தால் என்னுடைய மனைவி பிள்ளைகள் என்ன செய்வது. எனக்கு வேறு இடமில்லை. அவர்களைக் கொண்டு வைப்பதற்கு.

மற்றவர்களைப் போல் நான் பணக்காரன் இல்லை. ஒரு சாதாரண ஏழைத் தாயின் வயிற்றில் பிறந்தவன். நான் கடந்த பாராளுமன்ற தேர்தலில் பேட்டியிட்டதினால் எனது சொத்துக்கள் எல்லாம் அழிந்துவிட்டது. எனது வாகனத்தையும் விற்று கடன்களை இறுத்துவிட்டு இருக்கின்றேன். இந்த பேஸ்புக்கில் பதிவு செய்தவர்களை பார்த்து நான் கேட்க விரும்புகிறேன், நான் உங்களுக்கும் இந்த ஊருக்கும் என்னைத் தண்டிப்பதற்கு நான் என்ன குற்றம் செய்தேன். வஞ்சகம் தீர்க்க வேண்டுமாக இருந்தால் நான் இந்த ஊருக்கு, இந்த நாட்டுக்காக, இந்த சமூகத்திற்காக நான் செய்த குற்றும் என்ன? அதனைக் கூறுங்கள். குற்றத்தை நிறுபித்தால் அத நியாயமானதாக இருந்து நிறுபித்தால் நானே எனது தலையைக் கொடுக்கின்றேன் வெட்டுங்கள் என்று. கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த பொது ஜன பெரமுன கட்சியானது தன்னுடைய கட்சில் பாராளுமன்றத் தேர்தல் கேட்டு தோற்கடிக்கப்பட்ட வேற்பாளர்களை அழைத்து ஒரு கப் தேனீர் கொடுத்து ஒரு ஆறுதல் வார்த்தைகள் கூட இது வரைக்கும் கூறவில்லையே என்ற மனக்கவளையோடு இருக்கின்றோம். அது மட்டுமல்ல தேர்தலில் பேட்டியிட்டு தோற்ற வேற்பாளர்களுக்கு இன்னும் இவ்வளவு நிதி, இத்தனை கிலோ மீற்றர் அபிவிருத்திகள் என்று யாருக்கும் ஒதுக்கவில்லை. எனது தந்திரத்தினாலும் எனது முயற்சியினாலும் தான் நான் இவைகளை எமது ஊருக்காகக் கொண்டு வந்துள்ளேன். நான் இந்த ஊருக்கு செய்து காட்ட வேண்டும் என்பதற்காக கொண்டு வந்தேன். என்னைப் போன்று எத்தனையோ பேர் எமது ஊரில் இருக்கிறார்கள். காட்டுங்கள் பார்க்கலாம் யார் அவ்வாறு செய்துள்ளார்கள் என்று. எனது ஊருக்காக கொண்டு வந்தேன், இது எனக்கு இறைவனால் வழங்கப்பட்ட சந்தர்ப்பம். நான் சொல்ல போனாள், முன்னாள் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்வாறான வேலைகளை செய்யவில்லை. அவர்கள் நன்றாக இருந்த வீதிகளைத்தான் செய்திருக்கிறார்கள். ஆனால் நான் மலை உடைத்து வீதிகளைப் போட்டுள்ளளேன். நான் காசு வாங்கிக் கொண்டு எதுவும் செய்யவில்லை. எனது ஊருக்காகவே அனைத்தையும் செய்தேன். கவலையாக உள்ளது கௌரவ தவிசாளர் அவர்களே. எனது சக்திக்கு மீறி யாரும் செய்யாத சேவைகளை இந்த ஊர் மக்களுக்காக செய்த என்னைத் தாக்க வேண்டும் என்று முயற்சிப்பதையென்னி கவலையாக உள்ளது. அத்தோடு இன்றைய தினம் எமது சம்மாந்துறை பிரதேச சபைக்கு புதிதாக கௌரவ உறுப்பினராக வருகை தந்திருக்கின்ற (A.H.றமீஸ்) அவர்களை மீண்டும் ஒரு தடவை எமது சபை சார்பாகவும் எமது ஊர் சார்பாகவும் வருக வருகவென வரவேற்றவனாக வாய்ப்புக்கு நன்றி கூறி விடபெறுகின்றேன் நன்றி.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களின் மனக்குமுறலுக்கும் அப்பால் அவர் இந்த சபையில் அறிவித்த விடயங்கள் ஒரு பாரதூரமான விடயங்கள் அவர் சபை அமர்வுக்கு வருவதற்கு முன்பு நான் இந்த விடயம் பற்றி பேசியிருந்தேன். இந்த ஊரின் சரித்திரத்தில் அப்படியான ஒரு நிகழ்வு இந்த ஊரின் அரசியலில் எதிர்நீச்சல் போட்டவர்களில் முதன்மையானவர் நான் என்று நினைக்கின்றேன். அதில் கௌரவ உறுப்பினர் தொடர்ந்து பங்காளியாக இருந்து இருக்கின்றார். அப்படியிருந்தும் அப்படியான ஒரு கலாச்சாரம் இந்த ஊரில் இல்லை. இந்த ஊரில் வரவும் கூடாது. இந்தப் பேஸ்புக்கில் என்னைவிட விமர்சிக்கப்பட்டவர்கள் யாரும் இந்த ஊரில் இருக்க முடியாது. ஆனால் இந்த பேஸ்புக்கில் எழுதுபவர்கள் fake Account வைத்துக் கொண்டு எழுதும் கோளைகள். நீங்கள் அதை உங்கள் பாதுகாப்பை நீங்கள் தேட வேண்டும்.

நாங்கள் இந்த 19 பேரும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம். ஏனென்றால் எங்களுக்கு தெரியும் இந்த சபையில் நாங்கள் பல தடவை கூறியிருக்கின்றோம் உங்கள் நடவடிக்கைகள் எல்லாம் இந்த ஊரின் அபிவிருத்திக்காக செய்யப்பட்ட செயல்கள். அப்படியான ஒரு சூழலில் உங்களுக்கு ஒரு ஆபத்து வரும் ஆனால் நிச்சயமாக நாங்கள் எல்லோரும் அதற்கு உறுதுணையாக இருப்போம். ஆனால் தற்பாதுகாப்புக்காக ஒரு கௌரவ உறுப்பினர் என்ற ரீதியில் நீங்கள் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று நானும் உங்களுடன் வருகிறேன் இந்த பேஸ்புக் கமன்ஸை வைத்து நீங்கள் ஒரு ஸ்டேட்மென்ட்ஸ் பதியுங்கள். தற்பாதுகாப்புக்காக கட்டாயம் பதிய

வேண்டும். இந்த சபை முடிந்ததும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு கட்டாயம் பேசுவேன். நேற்று கூட நான் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் கதைத்து அவர்களும் சில துப்புகளை வைத்து வெளியிலிருந்து வந்து இரவு நேரங்களில் இங்கு வந்த சில சம்பவங்களை செய்வதற்கு முயற்சிப்பதாக என்னிடம் கூறியிருந்தார்கள். அப்படியான நிகழ்வுகள் இந்த ஊரில் நடக்கக் கூடாது. அப்படி அதற்கு யாராவது துணைபோவார்களானால் அவர்கள் இந்த ஊருக்கு செய்யும் துரோகம்.

உங்களுடைய விடயத்தில் நிச்சயமாக உங்களுக்கு தெரியும் எந்த நேரமும் எது நடந்தாலும் நாங்கள் எல்லோரும் உங்களோடு எப்போதும் என்ற உறுதி மொழியைக் கூறி, இந்த மீன் சந்தை விடயத்தை உங்களுக்கு தெரியும் இந்த ஊரில் மீன் சந்தை ஹிஜ்றா சந்தைக்குள் இயங்கியும் சில வேளைகளில் 12 மணி ஆனவுடன் மீன்கள் வீதிக்கு கொண்டு வரும் பழக்கம் ஒன்று இருந்தது. அதன்பின் கொவிட் காரணமாக அது பரவலாக்கப்பட்டது நிர்வாகத்தினால். povement வியாபாரத்தை நாம் கட்டுப்படுத்துவதானால் நிச்சயமாக நாம் சபையில் இன்று ஒரு முடிவு எடுப்போம், இந்த சனநெரிசல் உள்ள இடங்களில் povement வியாபாரம் செய்வதை இச்சபை தடை செய்கின்றது என்ற தீர்மானத்தை எடுப்போம்.

### தீர்மானம் - 04/51/03

ஹிஜ்றா சந்தியை சூழவுள்ள சனநெரிசல் உள்ள இடங்களில் povement வியாபாரம் செய்வதை தடை செய்வதற்கான பிரேரனையினை RDA, MOH, Police Staion போன்ற இடங்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

இவ்வாறு முடிவை எடுத்து பொலிஸ் நிலையத்திற்கும், MOH இற்கும் அறிவிப்போம். அகற்றுவது அவர்களின் கடமை. நாம் அகற்ற முடியாது. அது RDA, RDD க்குச் சொந்தமானது. ஆனால் சுகாதார ரீதியில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவார்கள் என்ற ரீதியில் அந்த முடிவை எடுத்து நாம் அதனை அறிவிப்போம் அதன்பின் அதனை பின்தொடர்ந்து அதனை நிறைவு செய்வதற்கு முயற்சி எடுப்போம். கௌரவ உறுப்பினர் இன்பவதி கூறியது போன்று அதே பிரச்சினை. povement பிரச்சினை இந்த கலாச்சாரம் தொடங்கியது கொவிட்டில்தான். இது எம்மால் உருவாக்கப்பட்ட ஒன்றுதான். இது காலா காலத்துக்கும் தொடர்ந்து கொண்டே இருக்கும். இது பொதுச்சந்தை வியாபாரிகளுக்கு தடையாக இருக்கக்கூடாது. இதற்கான நடவடிக்கைகளை நாம் எடுப்போம். கௌரவ உறுப்பினர் நளீமின் உரையில் சென்னெல் கிராமம் பிரதேசத்தில் அவரின் வட்டாரத்தில் ஆகக்கூடிய செலவீனங்கள் செய்யப்பட்டது சம்மாந்துறையின் பின்தங்கிய பகுதியில் முதலிடமாக இருப்பது அந்தப் பகுதி. சென்நெல்கிராம் 2 கல்லரிச்சல் 1,2. அதனால் அந்தப் பகுதியில் வந்த சகல வேைலகளுக்கும் நாம் சபையாக கௌரவ உறுப்பினா் அஸ்பா் கூறியவாறு முன்னுரிமை வழங்கி நமக்கு அதனைச் செயலாற்ற முடியுமாக இருந்தது. இந்த இரண்டு பாதைகள் TC வீட்டுத்திட்ட பாதை துரதிஸ்டவசமாக கையளிக்கப்படாத ஒரு நிலமாக இன்றும் அரச கானியாகக் காட்டப்படுவதனாலேயே இந்த இழுபறி. அதனை அளவையியல் திணைக்களத்துக்கு Requisition போட்டு அந்தப் படத்தில் இல்லை என்று கூறி இறுதியில் அவர்கள் Town Sheet ஐ வைத்து அததை பூர்த்தி செய்து தருவாதாகக் கூறி இன்னும் அதனைத் தரவில்லை. அடுத்ததாக தைக்கா தெற்கு வீதி, இறுதியாக அவர்களின் உறுதியை கேள்விக்குட்படுத்தி அந்தப் பாதையில் நாம் நில அளவையாளர் மூலம் எடுத்த அறிக்கையை வைத்து அவர்களுக்கு இறுதி அறிக்கை

அனுப்பப்பட்டுள்ளது. அந்த கால அவகாசம் முடிந்ததும் அதற்கு நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை வரும். ஏனென்றால் அவர்கள் எதற்கும் ஒத்து வருவதாக காணவில்லை. அவர்கள் அவ்வாறு ஒத்து வராவிட்டால் நிச்சயமாக நீதிமன்றத்திற்கு சென்று அந்த முடிவை எடுக்க வேண்டியதாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே பள்ளிவாசலோடு முதல் பேசி பல்லிவாசல் பக்கம் உள்ள 3அடி திறந்து விடுவதாக கூறப்பட்டிருந்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதற்கான முடிவை தைக்காப்பள்ளி நிர்வாகமோ, நம்பிக்கையாளர் சபையோ இன்னும் தரவில்லை. நிலூபா அவர்கள் ஏதோ கூறுவதாகக் கூறியிருந்தார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலூபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே நான் பெரிதாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஏற்கனவே இந்த சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் பேசி இருந்தார்கள் இந்த மீன் வியாபாரம் சம்பந்தமாக. நான் ஏற்கனவே Proposal ஒன்று கொண்டு வந்திருந்தேன். அந்த நேரத்தில் தான் கொவிட் வந்தது. அதனால் அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க முடியாமல் போனது. ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்த வரையில் ஒவ்வொரு மீன் வியாபாரிகளும் பாடசாலைகளை அண்மித்த பிரதேசங்களில் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதில் மாணவர்கள் உட்பட அந்த வழியாக செல்லும் பொது மக்களும் பாதிப்படைகின்றனர். அதற்குரிய நடவடிக்கையை சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அடுத்ததாக வளர்த்தாப்பிட்டியில் காணப்படுகின்ற சந்தைகளை புனர்நிர்மாணம் செய்து பெண்களுக்கான சந்தை வாய்ப்பை உருவாக்குவதற்கான முன்மொழிவு ஒன்று செய்து வருகின்றோம். அதை தற்பொழுது The search for Woments அமைப்பின் ஊடாக இந்த வேலையைச் செய்வதற்கு அனுமதியை சபையினால் வழங்க வேண்டும்.

வாரத்துக்கு ஒருமுறை அல்லது வாரத்திற்கு இருமுறை இந்த சந்தையை உருவாக்க இருக்கின்றோம். அதற்கு இந்த சபையின் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, போட்டி இல்லாமல் வெற்றி இல்லை என்பார்கள் ஆனால் போட்டி இல்லாமல் எமது சபை வெற்றியடைந்திருக்கின்றது என்பது சம்மாந்துறையில் இருக்கின்ற ஒவ்வொரு மக்களுக்கு உதாரணமாவும் எடுத்துக்காட்டாகவும் இந்த சபை இருக்கின்றது. இந்த சபைக்கு வருகின்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் ஒவ்வொரு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தாலும், இந்த சபைக்கு எடுத்து வருகின்ற எந்த ஒரு விடயமாக இருந்தாலும் நாங்கள் இந்த சபையை விட்டு கலைந்து செல்கின்ற போது ஏகமனதாக தீர்மானம் எடுத்து வெற்றி பெற்றிருக்கின்றோம். இது வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு தூரமாகவும் விமர்சனமாகவும் இருந்தாலும் கூட எங்களுக்கு ஒரு பெரிய ஒரு வாய்ப்பை இந்த சபை அமைந்திருக்கின்றது. அதில் நான் சொல்லவேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் வட்டாரத்தில் அபிவிருத்தி தேவைகள் இன்னும் இருக்கின்றது. ஆனால் எனக்கு கூட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அபிவிருத்தி செய்வதற்கான பாதைகள் இருந்தால் தாங்கள் என்று கூறியபோது நான் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் வட்டாரத்தை தெரிவு செய்து கொண்டிருந்தேன். ஆனால் என்ன ஒரு மன வருத்தம் என்றால் எல்லா உறுப்புகளுக்கும் இரண்டும் மில்லியன் வந்தது ஆனால் எனக்கு மட்டும் ஒரு மில்லியன் வந்தது. நீதமான பங்கீடு செய்யாமையினால் நான் வேண்டாம் என்று கூறிவிட்டேன். அது வேறு வட்டாரத்துக்கு போயிருந்தது அந்த வேளை நடந்ததா இல்லையா என்று நான் இதுவரை அறியவில்லை. அல்லாஹ் போதுமானவன் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/51/04**

வளத்தாப்பிட்டி பொதுச் சந்தை வளாகத்தை The search for Woments அமைப்பின் ஊடாக வளத்தாப்பிட்டியில் இருக்கும் சனசமூக நிலையத்துடன் இணைந்து பெண்களுக்கான சந்தையாக அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.நிலூபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

மிகவும் முக்கியமான ஒரு விடயத்தை நீங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டு. ஏனென்று சொன்னால் இந்த ஊர் இரண்டு சபையாகப் பிரிக்க வேண்டும் என்ற கட்டத்தில், நீங்கள் குறிப்பிட்டது அந்தக் கிராமங்களை முன்னேற்ற வேண்டும் என்று. இரண்டாகப் பிரித்தால் எந்த வருமானமும் இல்லாமல் போய்விடும் என்பதற்காகத்தான் நாங்கள் இங்குள்ள வளங்களைக் கொணடு இந்தக் கிராமங்களை முன்னேற்ற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சம்மாந்துறைப் பிரதேச சபையில் 2011 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையான சில செலவீனங்களைப் பார்ப்பீர்களானால் இருப்பவர்களிடம் இருந்து அறவிட்டு இலாதவர்களுக்கு செய்துள்ளோமே ஒழிய நகரத்திற்குள் நாம் எந்த நடவடிக்கையும் செய்யவில்லை. காரணம் இந்த ஊர் ஒன்றாக அபிவிருத்தி செய்யப்ப வேண்டு. ஊர் நகரமாகவே மாற வேண்டுமே ஒழிய ஒரு பகுதி நகரமாகவும் இன்னொரு பகுதி கிராமமாகவும் இருப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்த சபையும் அந்த நிலைப்பாட்டில் இருந்துதான் எமது செயல்களை செய்து வந்துள்ளோம். இன்ஷா அல்லாஹ் இறைவன் என்ன நாடுகின்றானோ வருங்காலங்களில் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பதற்காக அரசாங்கம் என்னென்ன முடிவுகளை எடுக்குமோ தெரியாது ஆனால் நாமும் தொடர்ந்தும் அந்தப் பயனத்திலேயே செல்வோம். அதனை சுட்டிக்காட்டிய உதவித் தவிசாளர் அவர்களுக்கு நன்றி கூறி இந்த சபை அமர்வை முடித்துக் கொள்கின்றேன்.

ஏ.எம்.எம்.நௌஷாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை